

சிங்கப்பூரிலுள்ள இடங்களின் வரலாற்றையும் சமூக நினைவலைகளையும் ஆவணமாகப் பதிவுசெய்து படைப்பதற்குத் தேசிய மரபுடைமை கழகம் மேற்கொண்டுவரும் தொடர் முயற்சியின் ஒரு பகுதியே தெம்பனிஸ் மரபுடைமை உலா. இப்பகுதியில் வேலை செய்தவர்கள், வாழ்ந்தவர்கள் அல்லது பொழுது போக்கியவர்கள் தங்களது இனிய ஞாபகங்களை நினைவுகூறவும், வருகையாளர்களுக்கும் புதிய குடியிருப்பாளர்களுக்கும் பயனுள்ள தகவல் அளிக்கவும் இந்த உலா துணை புரியும் என நம்புகிறோம்.

ஆதரவளிப்போர்

National Heritage Board

MCCY Ministry of Culture, Community and Youth



தெம்பனிஸ் வட்டச் சந்தையும் சுற்றுவட்டாரமும், 1980களில் வீடமைப்பு வளர்ச்சிக் கழகம் வழங்கிய புத்தகப்படம்

# பரிந்துரைக்கப்படும் குறுகியதூர உலாப் பாதைகள்

தெம்பனிஸ் வட்டாரம் முதன்முதலில் 1828-ம் ஆண்டு நில வரைபடத்தில் "ஆர்.தெம்பினஸ்" எனப் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஒரு காலத்தில் கிராமமாக இருந்த தெம்பனிஸ், கடந்த இரண்டு நூற்றாண்டுகளில் விருது பெற்ற குடியிருப்பு வட்டாரமாக வளர்ச்சி அடைந்திருக்கிறது. தெம்பனிஸ் வட்டாரத்தின் வரலாற்றையும் உருமாற்றத்தையும், தெம்பனிஸ் வட்டார நூலகத்தில் அமைந்திருக்கும் நமது தெம்பனிஸ் காட்சிக்கூடத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும் நில வரைபடங்கள், காட்சிப்படங்கள், சமூகக் கதைகள் ஆகியவற்றிலிருந்து தெரிந்து கொள்ளலாம். தெம்பனிஸின் தனித்துவமிக்க வரலாற்றையும் கலாசார மரபுடைமையையும் வருகையாளர்கள் ஆராய்வதற்கென மூன்று கருப்பொருட்கள் கொண்ட உலாப் பாதைகளைத் தேசிய மரபுடைமை கழகம் தயாரித்திருக்கிறது.

## தெம்பனிஸ் நகர உலா

### (1.5 மணிநேரம்; பேருந்து மற்றும் நடைப்பயணம்)

ஐக்கிய நாட்டு நிறுவனத்தின் உலகக் குடியிருப்பு விருதை 1991-ம் ஆண்டு பெற்ற தெம்பனிஸ் நகரம், சிங்கப்பூரின் பொதுக் குடியிருப்பு மேம்பாட்டில் குறிப்பிடத்தக்க சாதனையாகும். வீடமைப்பு வளர்ச்சிக் கழகம் (வீவக) அறிமுகப்படுத்திய நகரத் திட்டமைப்பு புத்தாக்கங்களில் சிலவற்றையும், தெம்பனிஸ் சமூகத்தின் அங்கமாகத் திகழும் அன்றாட மரபுடைமை இடங்களையும் இந்த உலாப் பாதை ஆராய்கிறது.

(குறிப்பு: தெம்பனிஸ் வட்ட ஈரச்சந்தை, உணவு நிலையத்தில் உள்ள கடைகளில் பெரும்பாலானவை மதியம் 3 மணி வரை மட்டுமே திறந்திருக்கும் என்பதால் இந்த உலாவைக் காலையில் தொடங்குவது நல்லது.)




நமது தெம்பனிஸ் மையத்திலுள்ள தெம்பனிஸ் வட்டார நூலகத்தின் இரண்டாம் மாடியில் அமைந்திருக்கும் நமது தெம்பனிஸ் காட்சிக்கூடத்திற்கு வருகையளித்து உங்கள் பயணத்தைத் தொடங்குங்கள். இங்கு, தெம்பனிஸ் வட்டார வரலாற்றைப் பற்றி மேலும் விவரமறிந்து, கடந்தகால, நிகழ்காலக் குடியிருப்பாளர்கள் பகிர்ந்துகொண்ட சமூகக் கதைகள் பலவற்றையும் ரசித்து மகிழலாம்.

அடுத்து, ஃபெஸ்டிவ் வாக் வெஸ்ட் வெளிவாயிலை நோக்கிச் செல்லுங்கள். தெம்பனிஸ் மையத்திற்குப் பின்னால் அமைந்திருக்கும் உலகக் குடியிருப்பு விருதின் நினைவுச் சிற்பத்தைக் காண்பீர்கள். ஐக்கிய நாட்டு நிறுவனம் 1991-ல் வழங்கிய இந்த விருது, தெம்பனிஸ் நகரில் வீடமைப்பு வளர்ச்சிக் கழகம் (வீவக) அறிமுகப்படுத்திய புதுமையான நகரத் திட்டமைப்பு உத்திகளுக்கு அங்கீகாரமளிக்கிறது. இந்த உத்திகளுடன் மற்ற நாடுகள் பின்பற்றக்கூடிய வெற்றிகரமான மனிதக் குடியிருப்பு வட்டாரமாகத் தெம்பனிஸ் திகழ்கிறது.



பூங்காவிலிருந்து எண் 25, தெம்பனிஸ் ஸ்திரீட் 21 எனும் முகவரியை நோக்கிச் செல்லுங்கள். அங்கே தெம்பனிஸ் சீனக் கோயில் அமைந்துள்ளது. புளோக் 231-க்குப் பக்கத்திலுள்ள இந்தக் கோயிலில் 12 தனித்தனி கோயில்கள் உள்ளடங்கியுள்ளன. அவற்றில் சில 19-ம் நூற்றாண்டிலிருந்து தெம்பனிஸில் இருக்கின்றன. கோயில் வளாகத்திலுள்ள இரண்டு தெம்பினிஸ் மரங்களை (ஸ்ட்ரெப்லஸ் இலாங்கேட்ஸ்) கவனிக்கத் தவறாதீர்கள். இந்த மரங்களிலிருந்துதான் தெம்பனிஸ் என்ற பெயர் தோன்றியது.



சிற்பத்தைப் பார்வையிட்ட பிறகு, தெம்பனிஸ் சென்ட்ரல் பூங்காவுக்கு நடந்து செல்லுங்கள். தெம்பனிஸில் இருக்கும் பற்பல பசுமைப் பரப்புகளில் ஒன்றான இந்தப் பூங்கா, அக்கம்பக்கங்களுக்கு இடையிலான இணைப்பாகவும் பயன்படுகிறது. இந்தப் பூங்காவில், 1980-களில் பிரபலமாகத் திகழ்ந்த வீவக-வின் மங்குஸ்தீன், குமுட்டிப்பழ விளையாட்டுத் திடல்களை நீங்கள் காணலாம். அதோடு, கலாசாரப் பதக்கம் பெற்ற காலஞ்சென்ற சிற்பி இங் எங் டெங் உருவாக்கிய சிற்பத்தையும் காணலாம்.



இந்த உலாவில் நீங்கள் கடைசியாகச் செல்லும் இடம் தெம்பனிஸ் வட்ட ஈரச்சந்தை, உணவு நிலையம். இது 1983-ம் ஆண்டு திறக்கப்பட்டதிலிருந்து குடியிருப்பாளர்களின் சமூக மையமாகத் திகழ்ந்து வருகிறது. உலாவை முடித்ததற்கு வெகுமதியாக உணவங்காடிக் கடைகளின் உள்ளூர் உணவு வகைகளைச் சுவைத்துப் பாருங்கள். அவற்றுள் பலவும் சஞ்சிகைகளிலும் உணவு வலைப்பதிவுகளிலும் பாராட்டப்பட்டவை.

## சமயத் தலங்கள் உலா

### (1.5 மணிநேரம்; பேருந்து மற்றும் நடைப்பயணம்)

தெம்பனிஸ் சமூகத்தின் பன்மயத்தை எடுத்துரைக்கும் பல சமய வழிபாட்டுத் தலங்கள் தெம்பனிஸில் உள்ளன. இந்த உலாவில் இடம்பெறும் வழிபாட்டுத் தலங்களில் சில, ஒரு நூற்றாண்டுக்கு மேலாகத் தெம்பனிஸில் இருந்து வருபவை. வருகையாளர்கள் இந்த வழிபாட்டுத் தலங்களைக் கண்டறியவும், அவற்றின் தனித்துவமிக்கக் கட்டடக்கலையையும் பாரம்பரியத்தையும் ஆராயவும் இந்த உலா வாய்ப்பளிக்கிறது.

(குறிப்பு: இந்த வழிபாட்டுத் தலங்களில் பெரும்பாலானவற்றுக்குள் பொதுமக்கள் செல்லலாம். ஆனால், தகுந்த பழக்கவழக்கம், உடை குறித்து ஏதேனும் வழிகாட்டிகள் இருந்தால் அவற்றைக் கடைப்பிடிக்கவும்.)



எண் 25, தெம்பனிஸ் ஸ்திரீட் 21 எனும் முகவரியில் கம்பீரமாகக் காட்சியளிக்கும் தெம்பனிஸ் சீனக் கோயிலில் உங்கள் பயணத்தைத் தொடங்குங்கள். இந்தக் கோயிலில் 12 தனித்தனி கோயில்கள் உள்ளடங்கியுள்ளன. அவற்றில் சில 19-ம் நூற்றாண்டிலிருந்து தெம்பனிஸில் இருக்கின்றன. கோயிலின் சுற்றுவட்டத்தை அலங்கரிக்கும் 270 மீட்டர் நீள கடல்நாகச் சிற்பம் கோயிலின் சிறப்பம்சமாகும். கோயில் வளாகத்தில் வளரும் இரண்டு தெம்பினிஸ் மரங்களையும் காணத் தவறாதீர்கள்.



அடுத்ததாக, தெம்பனிஸ் லிங்க்-குக்குச் செல்லுங்கள். அங்கே வரிசையாகக் கோயில்கள் அமைந்திருப்பதைக் காண்பீர்கள். கியூ சியன் கிங் கோயில் (7 தெம்பனிஸ் அவென்யூ) போன்ற சில கோயில்கள் ஆரம்பகாலத்திலிருந்து தெம்பனிஸில் அமைந்திருப்பவை. மற்ற சில கோயில்கள் சிங்கப்பூரின் வெவ்வேறு பகுதிகளிலிருந்து அண்மையில் தெம்பனிஸுக்கு இடம் மாறியவை. அவற்றுள் ஒன்றான ஜியூடியாவ்சியாவ் சின்பா நடுடான் கோயில் (95 தெம்பனிஸ் லிங்க்), ஒன்றுக்கு மேற்பட்ட சமயங்களின் வழிபாட்டுத் தலங்களுக்குப் பெயர் பெற்றது. இந்தக் கோயிலில், டாவிச துவா பெக் கொங், இந்து சமயத்தின் கணேசர், மலாயாவின் டத்தோ கொங் சந்நிதிகளைக் காணலாம்.



கோயிலிலிருந்து புறப்பட்டு, தெம்பனிஸ் அவென்யூ 5-ல் அமைந்திருக்கும் டருல் குஃப்ரன் பள்ளிவாசலுக்குச் செல்லுங்கள். 1990-ல் கட்டி முடிக்கப்பட்ட பள்ளிவாசலின் உயரமான தூபி, தெம்பனிஸின் தனித்துவமிக்க அடையாளச் சின்னமாகத் திகழ்கிறது. இந்தப் பள்ளிவாசல் கட்டப்பட்டபோது, இதுவே சிங்கப்பூரின் இரண்டாவது பெரிய பள்ளிவாசலாக இருந்தது. பள்ளிவாசலின் கொள்ளளவை அதிகரிக்க, 2016 முதல் மேம்பாட்டுப் பணிகள் நடந்து வருகின்றன. இந்தப் பள்ளிவாசல் 2018-ம் ஆண்டு கடைசியில் மீண்டும் திறக்கவிருக்கிறது.

இறுதியாக, உலாவின் கடைசி இடமான தெம்பனிஸ் ஸ்திரீட் 11-ல் அமைந்திருக்கும் கத்தோலிக் ஹோலி ட்ரினிட்டி தேவாலயத்திற்குச் செல்லுங்கள். இந்த ரோமன் கத்தோலிக்க தேவாலயம் 1990-ல் திறக்கப்பட்டதுமுதல், தெம்பனிஸில் வாழும் கத்தோலிக்கச் சமூகத்திற்குச் சேவையாற்றி வருகிறது. இத்தாலியின் மிலான் நகரிலிருந்து தருவிக்கப்பட்ட வண்ணக்கலைக் கண்ணாடிகளைத் தேவாலயத்தின் மத்திய மண்டபத்தில் காணலாம்.



## பசுமை பரப்புகள் உலா

### (1 மணி நேரம்; மிதி வண்டியில்)

தெம்பனிஸில் பற்பல பூங்காக்களும் பசுமை பரப்புகளும் உள்ளன. அவற்றுள் சில முன்பு தொழிற்சாலைகளாக இருந்தன. மிதிவண்டியில் செல்லும் இந்த உலா, பயன்படுத்தப்படாத கற்சுரங்கம், தெம்பனிஸின் முன்னாள் கிராமங்கள் அமைந்திருந்த இடங்கள், ஈரநிலமாக உருமாற்றப்பட்ட பழைய குப்பை கொட்டும் இடமான லோரோங் ஹாலுஸ் உள்ளிட்ட கண்கவர் இடங்களுக்கு உங்களை அழைத்துச் செல்லும்.



முன்பு மணல் குவாரியாக இருந்த பெடோக் ரிசர்வார்ரை பார்க், தெம்பனிஸ் அவன்யூ பத்திலிருந்து (வரைபடத்தில் குறிப்பிட்டபடி), உங்கள் பயணத்தை தொடங்குங்கள். 1960களில் சிங்கப்பூர் முழுவதும் ஹெச்.டி.பி. குடியிருப்புகளை உருவாக்க மணல் வழங்கிய குமாரிகள் தெம்பனிசில் இருபதுக்கும் மேற்பட்டவை இருந்தன. 1986 ஆம் ஆண்டில் இந்த குவாரிகல் ஒரு நீர்த்தேக்கமாக மாற்றியமைக்கப்பட்ட போதிலும், 1970 களின் பிற்பகுதியில் தெம்பனிஸ் டவுன் கட்டப்பட்டபோது இந்தக் குவாரிகளில் பெரும்பாலானவை நிரப்பப்பட்டன. இன்று, பெடோக் ரிசர்வார் பார்க், ஓடுபவர்கள் மற்றும் நீர் விளையாட்டு ஆர்வலர்கள் நிறைந்த ஒரு பிரபலமான பொழுதுபோக்குத் தலமாக உள்ளது.



கோயில்களைக் கடந்த பிறகு, தெம்பனிஸ் அவென்யூ-வில் வரிசையாகக் கடைவீடுகளைக் காணலாம். இவை முன்பொரு காலத்தில் முன்னாள் ஹன் யியாங் கிராமத்தின் ஒரு பகுதியாக இருந்தன. இருபதாம் நூற்றாண்டின் தாவரத்தோட்ட உரிமையாளர் கூ ஹன் யியாங்கின் பெயர் கிராமத்திற்குச் சூட்டப்பட்டது. இந்தக் கடைவீடுகளும், ஹன் யியாங் சாலை, ஜாலான் சாம் கொங்சி சாலை ஆகியவையும், கடந்தகால தெம்பனிஸின் எஞ்சியிருக்கும் சில அடையாளச்சின்னங்கள். இங்கே சற்று நேரம் ஓய்வெடுத்து, பானம் பருகிய பிறகு நீங்கள் உலாவைத் தொடரலாம்.








தெம்பனிஸ் அவென்யூ 10-ல் இருந்து தெம்பனிஸ் லிங்க் நோக்கி ஓட்டிச் செல்லுங்கள். அங்கே வரிசையாகக் கோயில்கள் அமைந்திருப்பதைக் காண்பீர்கள். கியூ சியன் கிங் கோயில் (7 தெம்பனிஸ் அவென்யூ) போன்ற சில கோயில்கள் 1900-களின் ஆரம்பகாலத்திலிருந்து தெம்பனிஸில் அமைந்திருக்கின்றன. மற்ற சில கோயில்கள் சிங்கப்பூரின் வெவ்வேறு பகுதிகளிலிருந்து தெம்பனிஸுக்கு இடம் மாறி வந்தன. வலது பக்கத்தில், தெம்பனிஸ் புதுநீர் சேவை நீர்த்தேக்கத்தைக் காண்பீர்கள். கவிழ்க்கப்பட்ட கூம்பு வடிவிலான இரண்டு தண்ணீர்த் தொட்டிகளுடன் நீர்த்தேக்கத்தை அடையாளம் காணலாம். அவை ஒவ்வொன்றிலும் 8,448 கன மீட்டர் அளவுக்குப் புதுநீர் நிரப்பலாம். வருங்காலத் தோற்றம் கொண்ட இந்தக் கூம்பு வடிவங்கள் புகைப்படம் எடுப்பதற்கு உகந்தவை, குறிப்பாக அந்தி சாயும் நேரத்தில்.

தெம்பனிஸ் அவென்யூ 10-ல் தொடர்ந்து பயணம் செய்து, பாசிர் ரிஸ் இன்டஸ்ட்ரியல் டிரைவ் 1-உடனான சாலை சந்திப்பை அடைந்தவுடன் இடதுபக்கம் திரும்பவும். இந்தத் தெருவின் கடைசியில், பாசிர் ரிஸ் ஃபார்ம்வே 2-க்குள் வலதுபக்கம் திரும்பவும். இடதுபக்கம் வளையும் சாலை வழியாகப் பாசிர் ரிஸ் ஃபார்ம்வே 3-க்குச் செல்லவும். அங்கே லோரோங் ஹாலுஸ் ஈரநிலப் பாதுகாப்புப் பகுதியைச் சென்றடைவீர்கள். முன்பு இங்கு சிராங்கூன் சாக்கடைக்கசடு சுத்திகரிப்பு ஆலை அமைந்திருந்தது. காலனித்துவ ஊராட்சி ஆணையம் 1941-ல் அமைத்த இந்த ஆலை, 1987 வரை சாக்கடைக்கசடுகளையும் மலக்கழிவையும் சுத்திகரித்தது. 1950 களில், ஸ்லெட்ஜ் வர்க்ஸ் சதுப்பு வட்டுக்களில் இருந்த முன்னாள் சதுப்பு நிலத்தின் ஒரு பகுதி, 1999 வரை ஒரு நிலக்கீழாக பயன்படுத்தப்பட்டது. பிற்பாடு 2000-ம் ஆண்டுகளில்தான் இந்த நிலப்பகுதி சீரமைக்கப்பட்டு, ஈரநிலமாக உருமாற்றப்பட்டது.


மிதிவண்டி உலாப் பாதை இங்கு முடிவடைகிறது. ஆயினும், நீங்கள் விரும்பினால் லோரோங் ஹாலுஸின் பசுமைச் சூழலைத் தொடர்ந்து ஆராயலாம். மாறாக, லோரோங் ஹாலுஸ் ஈரநிலப் பாதுகாப்புப் பகுதியைப் பொங்கோல் நீர்வழியுடன் இணைக்கும் சிவப்புப் பாலத்தில் சென்று, சிங்கப்பூரின் வடகிழக்கு வட்டாரத்தின் இயற்கை எழிலைத் தொடர்ந்து ரசித்து இன்புறலாம்.






# HERITAGE SITES IN THE SUGGESTED SHORT TRAIL ROUTES



CATHOLIC CHURCH OF THE HOLY TRINITY


LORONG HALUS WETLAND



MASJID DARUL GHUFRAN



OUR TAMPINES HUB


TAMPINES CENTRAL PARK


TAMPINES CHINESE TEMPLE


TAMPINES ROUND MARKET & FOOD CENTRE


TEMPLE CLUSTER AT TAMPINES LINK


WORLD HABITAT AWARD SCULPTURE